**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 182** **நாள்: 15.11.2018**

**தற்போது உருவாகியுள்ள கஜா புயலை எதிர்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது !**

**பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள 24x7 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள தொலைபேசி எண்களை தொடர்புகொண்டு பொதுமக்கள் மழை வெள்ளம் தொடர்புடைய புகார்களை தெரிவிக்கலாம் எனபெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப.,அவர்கள் தகவல் !!**

சென்னை வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பின்படி, தற்போது கஜா புயல் வங்கக்கடலில் மையம் கொண்டுள்ளதால் சென்னையில் கனமழை பெய்யும் வாய்ப்பு உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் கஜா புயலை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பாக அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்களாக இந்திய ஆட்சிப் பணியாளர் நிலையில் உள்ள அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் சம்பந்தப்பட்ட மண்டலங்களில் ஆய்வுகள் மேற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.

பொதுமக்கள் மழை மற்றும் வெள்ளம் தொடர்புடைய புகார்களை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அமைக்கப்பட்டுள்ள 24x7 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள 044–25384510, 25384520, 25384530, 25384540, 25619206, 25619511 ஆகிய தொலைபேசி எண்களிலும், 9445477205 என்ற வாட்ச்அப் (Whatsapp) எண்ணிலும், gcccontrolroom@gmail.com, என்ற மின்னஞ்சல் வழியாகவும் புகார்களை பதிவு செய்யலாம். பெறப்படும் புகார்களை சம்பந்தப்பட்ட மண்டலங்களுக்கு அனுப்பி உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு அறையில் வைக்கப்பட்டுள்ள தொலைக்காட்சியின் வாயிலாக கண்டறியப்படும் புகார்களின் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீட்புப்பணி குறித்த தகவல்களை உடனுக்குடன் அனைத்து அலுவலர்களுக்கும் தெரிவிக்க வயர்லெஸ் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்படும் 16 சுரங்கப்பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள 6 சுரங்கப்பாதைகளில் உயர்அழுத்த மின்மோட்டார்கள் மற்றும் சூப்பர் சக்கர் வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு குழு வீதம் மீட்புப் பணிகளில் ஈடுபட மீட்புக் குழுவினர் தயார்நிலையில் உள்ளனர். இரவு நேரங்களில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள 18 உயர் மின்கோபுர விளக்குகள் தயார்நிலையில் உள்ளது.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்களில் 622 பம்புகள் பல்வேறு தாழ்வான பகுதிகளில் வைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. அதுமட்டுமின்றி அதிக உயர்திறன் கொண்ட 60 எச்.பி. பம்புகள் 2, 50 எச்.பி. பம்புகள் 5, 25 எச்.பி. பம்புகள் 40, 130 ஜெனரேட்டர்களும், மழைக்காலங்களில் சாலையில் விழும் மரங்களை அப்புறப்படுத்துவதற்காக 24 மணிநேரமும் செயல்படும் வண்ணம் 371 மர அறுவை இயந்திரங்களும், 8 மரக்கிளைகளை அகற்றும் நவீன ஹைட்ராலிக் இயந்திரங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மழை வெள்ள மீட்புப் பணிகளில் ஈடுபட 108 மோட்டார் பொருத்தப்பட்ட படகுகளும், பொதுமக்களை தங்கவைப்பதற்காக 176 நிவாரண முகாம்களில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மற்ற எல்லா வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. உணவு தயாரிப்பதற்காக 4 பொது சமையல் கூடங்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மீட்பு குழுவைச் சேர்ந்த 60 நபர்கள் அரக்கோணத்திலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வரவழைக்கப்பட்டு தயார்நிலையில் உள்ளனர். மின்சார வாரியத்தின் மூலம் மழைக்காலங்களில் மின்தடை மற்றும் மின்கசிவு ஏற்படாத வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**